1981 மே 13]

ஆலங்குளம் காவல் நிலையம்

*வினா எண். 1080—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆலங்குளம் போலீஸ் ஸ்டேசன் சமூக விரோதிகளால் 1980 நவம்பர் முதல் வாரத்தில் தாக்கப்பட்டு கைதியை விடுதலை செய்தார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய முழு விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். (ஆ) 1-11-80 அன்று ஆலங்குளம் காவல் நிலைய அதிகாரிகள், அன்னைவிலாஸ் தேநீர் விடுதியின் உரிமையாளர் திரு. மவட்டும் பெருமாள் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் பாலசுப்பிரமணியன் என்பவரைக் கைது செய்து காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்து, அவரைக் காவல் அறையில் வைப்பதற்கான வழிமுறைகளை ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். 1/2-11-80 நள்ளிரவு நேரத்தில் கைது செய்யப்பட்ட பாலசுப்பிரமணியத்தின் தந்தை, ஆறுமுக கரையாளர், தன்னுடன் பலரை அழைத்து வந்து காவல் நிலையத்தில் இருந்த இளம் உதவி ஆய்வாளரையும், பாரா காவலரையும் பயங்கர ஆயுதங்களுடன் சூழ்ந்துகொண்டு பாலசுப்பிரமணியத்தை விடுவித்துச் சென்றார். மறுநாள் காவல் அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு இச்சம்பவத்திற்குக் காரணமாயிருந்த முக்கியமான குற்றவாளிகளை கைது செய்து வழக்குகளைக் பதிவு செய்தனர். வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தங்கள் அதிகாரத்தை சரிவர பயன்படுத்தி முறையாகச் செயல்படாத காரணத்தால் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள்மீது காவல்துறையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் காவல் நிலையத்தில் நடைபெற்ற சம்பவத்தில், அங்கிருக்கக்கூடிய காவலர்களில் ஒரு பகுதியினர் அந்த குற்றவாளிக்கு உடந்தையாக இருந்தது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட காவலர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நான் விடையிலேயே குறிப்பிட்டேன். ஆகவே, அதிலே நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டு வருகிறது. யார் யார் மீது என்பதைப் பற்றித தக்க நடவடிக்கைகள் எடுக்க மேலதிகாரிகள் மேற்கொண்டு, அறிக்கை வருகின்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS